சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – தாட்கோ – 2021-2022-ஆம் ஆண்டு அறிவிப்புகள் - ரூ.3 கோடி மதிப்பீட்டில் 2000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு தலா ரூ.15,000/- மானியத்தில் நீர்ப் பாசனத்திற்கான பிவிசி குழாய்கள் (PVC Pipes) மற்றும் ரூ.2 கோடி மதிப்பீட்டில் 2000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு தலா ரூ.10,000/- மானியத்தில், புதிய மின்மோட்டார் வாங்கிட நிருவாக அனுமதி வழங்கப்பட்டது – திட்ட செயல்பாட்டிற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(சிஉதி)துறை

அரசாணை (நிலை) எண். 67 நாள்:18.08.2022

சுபகிருது வருடம், ஆவணி 2 ஆம் நாள்

திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கப்பட்டது:-

1 அரசாணை(நிலை)எண்.101, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள்.06.12.2021.

2 அரசாணை(நிலை)எண்.102, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள். 06.12.2021.

3 தாட்கோ, மேலாண்மை இயக்குநர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடித ந.க.எண்.ஜி1/1952/2022, நாள்.05.07.2022.

**********

ஆணை:-

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் மாண்புமிகு அமைச்சர் ஆதிதிராவிட நலம் அவர்கள் 2021-2022-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில் ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த 1300 விவசாயிகளுக்கும், பழங்குடி இனத்தைச் சேர்ந்த 700 விவசாயிகளுக்கும், நீர் பாசனத்திற்கான பிவிசி குழாய்கள் (PVC Pipes) வாங்குவதற்கு, ஒரு விவசாயிக்கு ரூ 15,000/- மானியம் வீதம், 2000 விவசாயிகளுக்கு, மானியமாக ரூ.3 கோடி தாட்கோ மூலம் விடுவிக்க நிருவாக ஒப்பளிப்பு வழங்கி அரசால் ஆணையிடப்பட்டது. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த 1800 விவசாயிகளுக்கும், பழங்குடியினத்தைச் சேர்ந்த 200 விவசாயிகளுக்கும் ஆக மொத்தம் 2000 விவசாயிகளுக்கு தங்கள் நில மேம்பாட்டிற்காக புதிய மின் மோட்டார் அல்லது பழைய மின் மோட்டாருக்கு பதில் புதிய மின் மோட்டார் வாங்கிட தலா ரூ.10,000/- மானியமாக வழங்கத் தேவைப்படும் நிதி ரூ.2.00 கோடி செலவினத்திற்கு நிருவாக அனுமதி வழங்கி அரசால் ஆணையிடப்பட்டது.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட தாட்கோ மேலாண்மை இயக்குநர் அவர்களின் கடிதத்தில், மேலே முதலாவதாக மற்றும் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையை செயல்படுத்த ஏதுவாக தோட்டகலை மற்றும் வேளாண்மை துறையில் செயல்படுத்தும் "Sustainable Water Management Activity" (SWMA) திட்ட அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட

விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் மற்றும் வேளாண்மை/தோட்டக்கலை துறையில் பயன்படுத்தும் பொது விண்ணப்பம் மற்றும் தனித்த கள ஆய்வு குறிப்பு படிவங்களை அரசின் ஒப்புதலுக்காக அனுப்பியுள்ளார்.

3. தாட்கோ, மேலாண்மை இயக்குநர் அளித்துள்ள வழிகாட்டி நெறிமுறைகள், விண்ணப்ப படிவம் மற்றும் தனித்த களஆய்வு குறிப்பு படிவம் அடங்கிய கருத்துரு அரசால் ஆய்வு செய்யப்பட்டது. அதனடிப்படையில் தாட்கோ மேலாண்மை இயக்குநரின் கருத்துருவினை ஏற்று அரசாணை(நிலை)எண்.101, ஆதி(ம)பந துறை, நாள்.06.12.2021 மற்றும் அரசாணை(நிலை)எண்.102, ஆதி(ம)பநதுறை, நாள்.06.12.2021-இல் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்களை செயல்படுத்திட ஏதுவாக வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் பொது விண்ணப்ப மற்றும் தனித்த கள ஆய்வு குறிப்பு குறித்த படிவங்கள் இவ்வரசாணையுடன் இணைக்கப்பட்டுள்ளது. மேற்காணும் வழிமுறைகளை பின்பற்றி இத்திட்டங்களை செயல்படுத்துமாறு தாட்கோ, மேலாண்மை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும், இத்திட்டங்களுக்கான தகுதி வாய்ந்த பயனாளர்களை தெரிவு செய்யுமாறும், உரிய பதிவேடுகளை பராமரிக்குமாறும் ஆதிதிராவிடர் நலம், இயக்குநர் / பழங்குடியினர் நலம், இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

//ஆளுநரின் ஆணைப்படி//

தென்காசி சு ஜவஹர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர் , ஆதி திராவிடர் நலம், சென்னை-5.
இயக்குநர் ,பழங்குடியினர் நலம், சென்னை- 5.
மேலாண்மை இயக்குநர் , தாட்கோ , சென்னை -18.
அனைத்து மாவட்ட ஆதி திராவிடர் மற்றும்பழங்குடியினர் நல அலுவலர்கள்
(ஆதிதிராவிடர் நலம் இயக்குநரகம் வழியாக).
அனைத்து மாவட்ட மேலாளர்கள், தாட்கோ, (தாட்கோ வழியாக).
மாவட்ட திட்ட அலுவலர், (பழங்குடியினர் நலம்)
(சேலம், தர்மபுரி, நாமக்கல், திருச்சி,திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர்)
நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம் ,சென்னை-9.
ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை -9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல
கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலர் , சென்னை-9.
நிதி (ஆதி (ம )பந) த்துறை , சென்னை -9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (அநமு-1/ஆதிந-5/ப.மே1)
துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு /உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சி. சாமிநாதன் 18/8/2022
பிரிவு அலுவலர்

**இணைப்பு -I**

**அரசாணை (நிலை) எண். 67, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் (சிஉதி)துறை, நாள்.18.08.2022.**

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கு நீர்பாசனத்திற்கான பிவிசி குழாய்கள் (PVC Pipes) வாங்கும் திட்டம் – வழிகாட்டு நெறிமுறைகள்.**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள் தங்கள் நில மேம்பாட்டிற்காக ஆழ்துளை கிணறு மற்றும் திறந்தவெளி கிணறுகள் மூலம் நீர் பாசனத்திற்கு பயன்படுத்தப்படும் பிவிசி குழாய் (PVC Pipe) அமைத்து கொள்ள ஆகும் செலவில் 50 சதவீதம் மானியம் அல்லது அதிகபட்சம் ரூ.15,000/- பெற இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**அ) தகுதிகள்**

1) விண்ணப்பதாரர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தை சார்ந்தவராக இருக்க வேண்டும்.
2) விண்ணப்பதாரர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் பெயரில் நிலம் இருக்க வேண்டும்.
3) விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டவராக இருக்க வேண்டும்.
4) தாட்கோ மானிய திட்டத்தில் பயன் பெறாத ஆதிதிராவிட பழங்குடியின விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
5) மேலும் சிறு, குறு மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
6) ஏற்கனவே தாட்கோ திட்டத்தில் நிலம் வாங்கும் திட்டம், நிலம் மேம்படுத்தும் திட்டம், துரித மின் இணைப்புத் திட்டம் மற்றும் மின் மோட்டார் மானியத் திட்டம் ஆகிய திட்டங்களில் பயன் பெறாதவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இம்மானிய திட்டத்தில் தேவையான அளவு விண்ணப்பங்கள் பெறப்படாத நிலையில் விண்ணப்பதாரர்கள் தாட்கோவின் இதர திட்டங்களில் பயன்பெற்று இருந்தாலும் இத்திட்டத்தில் பயன்பெறலாம். மேலும், இதுவரை துரித மின் இணைப்புத் திட்டத்தின் கீழ் விண்ணப்பித்து நிலுவையில் உள்ளவர்களுக்கு மூப்பின் (Seniority) அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும்.
7) ஏற்கனவே உள்ள PVC குழாய் மாற்றத்திற்கு மானியம் வழங்கப்படமாட்டாது.

**ஆ) நிபந்தனைகள்**

1) Pradhan Mantri Krishi Sinchayee Yojana / Supplementary Water Management Activities ஆகிய திட்டங்களில் வழிகாட்டுதலை மையமாக வைத்து இத்திட்டம் செயல்படுத்த வேண்டும்.
2) வேளாண் துறையின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து அங்கீகரிக்கப்பட்ட வகை பிவிசி குழாய்கள் கொள்முதல் செய்ய வேண்டும்.
3) வேளாண் / தோட்டக் கலை துறையில் பிவிசி குழாய்கள் வாங்க மானியம் பெற்றவர்கள் மற்றும் விண்ணப்பங்கள் பதிவு செய்துள்ளவர்கள், இத்திட்டத்தில்

பயன்பெற இயலாது. எனினும் தாட்கோவின் எந்த திட்டத்திலும் பயன் பெற்றவர்களிடம் இருந்து தேவையான விண்ணப்பங்கள் பெறப்படாத நிலையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மானியத் திட்டத்தில் மின் மோட்டார் மானியம் பெற்றவர்கள் இத்திட்டத்தில் பயன்பெறலாம்.

4) விண்ணப்பிக்கும் விவசாயி அவர்தம் நிலத்தில் 2.5 ஏக்கர் அளவு வரையுள்ள நில பரப்பிற்காக அமைக்கப்படும் பிவிசி குழாய் நிர்மானிப்புக்கு மட்டும் 50 சதவீதம் அல்லது அதிகபட்சம் ரூ.15,000/- வரை மானியம் வழங்கப்படும்.

5) மேலும் மாவட்ட மேலாளர்கள் அவர்களது மாவட்டத்தில் இணை இயக்குநர் / வேளாண்மை துறை அவர்களை ஆலோசித்து மாவட்ட இலக்கினை வட்ட அளவில் இலக்கு நிர்ணயித்துக்கொள்ள வேண்டும்.

6) மானியம் பெற விண்ணப்பிக்கும் போது விவசாய நிலத்தில் பயனாளியுடன் இடம், நேரம் காட்டும் ஒரு Geo tag புகைப்படம் PVC குழாய் அமைப்பதற்கு முன்னரும், நிறுவிய பின்னரும் எடுத்து விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். பயனாளி நிலத்தில் கள ஆய்வின்போது தோட்டக்கலை அலுவலர் / மாவட்ட மேலாளர், தாட்கோ அலுவலர்களோடு இருக்கும் புகைப்படம் Geo tag உடன் கோப்பில் வைத்து பராமரிக்கப்படவேண்டும்.

7) சிட்டா, அடங்கல் மற்றும் கள ஆய்வு புகைப்படம் மற்றும் தோட்டக்கலை அலுவலர் / மாவட்ட மேலாளர், தாட்கோ மாவட்ட மேலாளரின் சரிபார்ப்பு சான்று பெற்ற பின்னர் மட்டுமே காசோலை வழங்கப்பட வேண்டும்.

8) PVC குழாய் ஆகிய உபகரணங்கள் CS / Agriculture Engineering அவர்களால் அளிக்கப்பட்ட நிறுவனத்திடம் இருந்து கொள்முதல் செய்யப்பட வேண்டும்.

9) விவசாய நில தள ஆய்வின்போது குறிப்பிட்ட அளவு அதாவது நுண்ணுயிர் பாசன (Micro Irrigation) செயல்பாட்டிற்கு தேவையான அளவு நீர்வரப்பெறுவது உறுதி செய்ய வேண்டும்.

10) விவசாயிகள் தாங்கள் வாங்கியுள்ள PVC குழாய் ISI/BIS தரச் சான்று பெற்றுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

11) PVC குழாய் மானியம் வழங்கும் போது அத்தகைய அமைப்புகள் நுண்ணுயிர்ப் பாசன (Micro Irrigation) செயல்பாட்டிற்கு உதவுகிறதா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

12) ஏற்கனவே உள்ள Conveyance PVC குழாய்களுக்கு மானியம் வழங்கப்படமாட்டாது.

<u>இ) மானியம் பெற மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் வரைபடம்</u>

I. TAHDCO Portal இணைய வழி விண்ணப்ப பதிவு மேற்கொள்ளல்.

II. மாவட்ட மேலாளர் கள ஆய்வு மேற்கொண்டு தகுதியான விண்ணப்பதாரர்கள் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நேர்காணல் நடத்தப்பட வேண்டும்.

III. மாவட்ட மேலாளர் விலைப்புள்ளியினை ஆய்வு செய்து கோடிட்ட காசோலையாக நிறுவனத்திற்கு வழங்க வேண்டும் மீதமுள்ள தொகை பயனாளியே அந்நிறுவனத்திற்கு செலுத்த வேண்டும்.

IV. உபகரணம் கொள்முதல், விலைப்பட்டியல் (Invoice) சரிபார்த்தல் மற்றும் Geo tag புகைப்படம் ஆகியவற்றை தாட்கோ இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

**<u>ஈ) விண்ணப்பத்தாரர்களை தேர்வு செய்யும் முறை</u>**

கீழ்கண்ட அலுவலர்களை கொண்டு மாவட்ட மேலாளர், தாட்கோ, உறுப்பினர் செயலராக இருந்து தேர்வு குழு நடத்தி பயனாளிகளை தேர்வு செய்வர்.

| | |
|---|---|
| மாவட்ட ஆட்சியர் | தலைவர் |
| இணை இயக்குநர், வேளாண்மைத் துறை | உறுப்பினர் |
| துணை இயக்குநர், தோட்டக்கலை துறை | உறுப்பினர் |
| மாவட்ட மேலாளர், தாட்கோ | உறுப்பினர் செயலர்/ ஒருங்கிணைப்பாளர் |

**<u>உ) மானியம் வழங்கும் முறை</u>**

தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் பிவிசி பைப் லைன் வாங்குவதற்காக வழங்கப்பட்ட விலைப்புள்ளி நிறுவனத்திற்கு தாட்கோ மாவட்ட மேலாளர்கள் கோடிட்ட காசோலையாக (account payee) வழங்க வேண்டும். காசோலை வழங்கப்பட்ட ஒரு வாரத்திற்குள் பைப் லைன் நிறுவப்பட்டதை மாவட்ட மேலாளர்கள் கள ஆய்வு செய்து நேரம் மற்றும் நாள் உள்ளவாறு புகைப்படம் எடுக்கப்பட்டு தாட்கோ இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும் மற்றும் நிறுவனத்திடமிருந்து ரொக்க ரசீது நகல் பெற்று கோப்பில் வைக்க வேண்டும். விவசாயி பிவிசி குழாய் வாங்க வங்கிக்கடன் பெற்றிருந்து, செலுத்தப்பட வேண்டிய தொகை நிலுவை இருப்பின், மானியத் தொகை அவ்விவசாயின் வங்கி கணக்கிற்கு அனுப்பி வைக்கப்படும்.

தென்காசி சு ஜவஹர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

// உண்மை நகல்//

18/8/2022
பிரிவு அலுவலர்.
18/8/22

<u>இணைப்பு -II</u>

<u>அரசாணை (நிலை) எண். 67, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் (சிஉ_தி)துறை, நாள். 18.08.2022.</u>

<u>ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கு தங்கள் நில மேம்பாட்டிற்காக புதிய மின் மோட்டார் / புதிய டீசல் இன்ஜின் பம்ப் வாங்கி நிறுவ ஆகும் செலவில் 50% அல்லது ரூ.10,000/- மிகாமல் மானியம் வழங்கும் திட்டம் வழிகாட்டு நெறிமுறைகள்.</u>

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள் தங்கள் நில மேம்பாட்டிற்காக, ஆழ்துளை கிணறு மற்றும் திறந்தவெளி கிணறுகள் மூலம் நீர் பாசனத்திற்கு பயன்படுத்தப்படும் புதிய மின் மோட்டார் வாங்குவதற்கு GST யுடன் சேர்ந்து மொத்த விலையில் 50 சதவீதம் அல்லது அதிக பட்சமாக ரூ.10,000/- மானியம் பெற இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

<u>அ. தகுதிகள்</u>

1) விண்ணப்பதாரர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தை சார்ந்தவராக இருக்க வேண்டும்.
2) விண்ணப்பதாரர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் பெயரில் நிலம் இருக்க வேண்டும்.
3) விவசாயத்தைத் தொழிலாக கொண்டவராக இருக்க வேண்டும்.
4) தாட்கோ மானிய திட்டத்தில் பயன்பெறாத ஆதிதிராவிட விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
5) மேலும் சிறு, குறு மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
6) ஏற்கனவே தாட்கோ திட்டத்தில் நிலம் வாங்கும் திட்டம், நிலம் மேம்படுத்தும் திட்டம் மற்றும் துரித மின் இணைப்புத் திட்டம் ஆகிய திட்டங்களில் பயன் பெறாதவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மேற்படி திட்டத்தில், தேவையான விண்ணப்பம் பெறப்படாத நிலையில் விண்ணப்பதாரர் மேற்படி திட்டங்களில் பயன்பெற்று இருந்தாலும் இத்திட்டத்தில் பயன்பெறலாம், மேலும் இதுவரை துரித மின் இணைப்புத் திட்டத்தின் கீழ் விண்ணப்பித்து நிலுவையில் உள்ளவர்களுக்கு மூப்பின் (Seniority) அடிப்படையில் மேலே பெறப்பட்ட வரையறைப்படி பரிசீலிக்கப்படும்.
7) ஏற்கனவே உள்ள மின் மோட்டார் இனங்களின் மாற்றத்திற்கு (Replacement) மானியம் பொருந்தாது.

<u>ஆ) நிபந்தனைகள்</u>

1) Prathan Mantri Khrisha Simthayee Yojana (PMKSY) மற்றும் Supplementary Water Management Activities (SWMA) ஆகிய திட்ட வழிகாட்டுதலை மையமாக கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும்.

2) வேளாண் துறையின் SWMA திட்டத்தில் மின் மோட்டார் மானியம் பெற்றவர்கள், மானியத்திற்கு பதிவு செய்துள்ளவர்கள் இத்திட்டத்தில் பயன்பெற இயலாது. இருப்பினும் தாட்கோவின் எந்த திட்டத்தில் இருந்தும் பயன்பெறாதவர்களிடம் இருந்து தேவையான அளவு விண்ணப்பம் பெறப்படாத நிலையில் PVC குழாய் மான்யம் பெற்றவர்கள் / பதிவு செய்தவர்கள் இத்திட்டத்தில் மானியம் பெறலாம்.
3) வேளாண் துறையின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து அங்கீகரிக்கப்பட்ட வகை மின் மோட்டார் கொள்முதல் செய்ய வேண்டும்.
4) மேலும், மாவட்ட மேலாளர்கள் அவர்களது மாவட்டத்தில் இணை இயக்குநர், வேளாண்மை துறை அவர்களை ஆலோசித்து இலக்கு நிர்ணயித்துக் கொள்ள வேண்டும்.
5) மானியம் பெற விண்ணப்பிக்கும் போது விவசாய நிலத்தில் பயனாளியுடன் இடம், நேரம் காட்டும் ஒரு Geo tag புகைப்படம், மின் மோட்டார் / டீசல் இஞ்சின் பம்ப் அமைப்பதற்கு முன்னரும், நிறுவிய பின்னரும் எடுத்து விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். பயனாளி நிலத்தில் கள ஆய்வின் போது தோட்டக்கலை அலுவலர் / மாவட்ட மேலாளர், தாட்கோ அலுவலர்களோடு இருக்கும் புகைப்படம் Geo tag உடன் கோப்பில் வைத்து பராமரிக்கப்பட வேண்டும்.
6) சிட்டா, அடங்கல் மற்றும் கள ஆய்வு புகைப்படம் மற்றும் தோட்டக்கலை அலுவலர் / மாவட்ட மேலாளர், தாட்கோ மாவட்ட மேலாளரின் சரிபார்ப்பு சான்று பெற்ற பின்னர் மட்டுமே காசோலை வழங்கப்பட வேண்டும்.
7) தோட்டக்கலை அலுவலர் / மாவட்ட மேலாளர், தாட்கோ அலுவலர்கள் கள ஆய்வின்போது மின் மோட்டார் / டீசல் பம்ப் விபர குறிப்பு (Specification) உள்ள அளவு கொள்ளளவு தண்ணீர் ஏற்றுகிறதா என்பதை உறுதி செய்ய வேண்டும். மேலும் மின் மோட்டார் வாங்கிய விலைப்பட்டியலின் (Invoice) நகல் மற்றும் கட்டண ரசீது ஆகிய ஆவணங்களை ஆய்வு செய்து உண்மை தன்மையை உறுதி செய்துகொள்ள வேண்டும்.
8) விவசாயிகள் தாங்கள் வாங்கியுள்ள மின் மோட்டார் ISI/BIS தரச்சான்று பெற்றுள்ளதா என்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.
9) மின் மோட்டார் பொருத்தப்பட்டதை Geo coardinates புகைப்படம் எடுத்து சமர்ப்பிக்க வேண்டும், அதன் அடிப்படையிலேயே மான்யம் விடுகிக்கப்படும்.
10) ஏற்கனவே உள்ள மின் மோட்டார் / டீசல் பம்ப் அமைப்புகளுக்கு மான்யம் வழங்கப்பட மாட்டாது.

**இ) விண்ணப்பதாரர்களை தேர்வு செய்யும் முறை**

கீழ்கண்ட அலுவலர்களை கொண்டு மாவட்ட மேலாளர், தாட்கோ உறுப்பினர் செயலராக இருந்து தேர்வுக் குழு மூலம் பயனாளிகளை தேர்வு செய்வர்.

| | |
|---|---|
| மாவட்ட ஆட்சியர் | தலைவர் |
| இணை இயக்குநர், வேளாண்மைத் துறை | உறுப்பினர் |
| துணை இயக்குநர், தோட்டக்கலை துறை | உறுப்பினர் |
| மாவட்ட மேலாளர், தாட்கோ | உறுப்பினர் செயலர்/ ஒருங்கிணைப்பாளர் |

**ஈ) மானியம் வழங்கும் முறை**

தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் மின்மோட்டார் வாங்குவதற்காக வழங்கப்பட்ட விலைப்புள்ளி நிறுவனத்திற்கு தாட்கோ மாவட்ட மேலாளர்கள் கோடிட்ட காசோலையாக (account payee) வழங்கப்பட வேண்டும். காசோலை வழங்கப்பட்ட ஒரு வாரத்திற்குள் மின் மோட்டார் நிறுவப்பட்டதை மாவட்ட மேலாளர் ஆய்வு செய்து நேரம் மற்றும் நாளுடன் புகைப்படம் எடுக்கப்பட்டு தாட்கோ இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும் மற்றும் நிறுவனத்திடமிருந்து ரொக்க ரசீது நகல் பெற்று கோப்பில் வைக்க வேண்டும். விவசாயி மின் மோட்டார் வாங்க வங்கிக்கடன் பெற்றிருந்து, செலுத்தப்பட வேண்டிய தொகை நிலுவை இருப்பின், மானியத் தொகை அவ்விவசாயின் வங்கி கணக்கிற்கு அனுப்பி வைக்கப்படும்.

தென்காசி சு ஜவஹர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

// உண்மை நகல்//

சி. சிவகுமரன் 18/8/2022
பிரிவு அலுவலர்.

18/8/22

**இணைப்பு -III**

**அரசாணை (நிலை) எண். 67, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் (சிஉதி)துறை, நாள். 18.08.2022.**

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகள் நீர்பாசனத்திற்கான பிவிசி குழாய்கள் (PVC Pipes) மற்றும் மின் மோட்டார் வாங்கும் திட்டம் - பொது விண்ணப்ப படிவம்.**

| | |
|---|---|
| Note: | The subsidy for the activities is eligible only if the Micro-Irrigation system is installed by the farmer. Without Micro Irrigation System (Drip/Sprinkler/Rain Gun etc.), the subsidy for these components is not eligible. |
| குறிப்பு | நுண்ணீர் பாசன அமைப்பு (Drip/Sprinkler/Rain Gun etc.) நிறுவியுள்ள விவசாயிகளுக்கு மட்டுமே பணிகளுக்கான மானியம் வழங்கப்படும். நுண்ணீர் பாசன அமைப்பு அமைக்காதவர்கள் இத்திட்டத்தின் கீழ் மானியம் பெற தகுதியற்றவர் ஆவர். |

| | | |
|---|---|---|
| 1 | Name of the Farmer<br>விவசாயியின் பெயர் | |
| 2 | Name of the Father/Husband<br>தந்தை / கணவரின் பெயர் | |
| 3 | Address of the Farmer<br>விவசாயின் முகவரி | |
| 4 | Name of the Village<br>கிராமத்தின் பெயர் | |
| 4a | Name of the Firka<br>குறுவட்டத்தின் பெயர் | |
| 4b | Name of the block<br>வட்டாரத்தின் பெயர் | |
| 5 | Category of land holding<br>நில உடமையாளரின் வகை | Marginal Farmer<br>குறு விவசாயி<br>Small Farmer<br>சிறு விவசாயி<br>Big Farmer<br>பெரு விவசாயி |
| 6 | Survey Number of farm for which subsidy activity required<br>மானியம் கோரும் பணிகளுக்கான நிலத்தின் புல எண் | |

| | | |
|---|---|---|
| 7 | Extent (ha)<br>பரப்பு (ஹெக்டேர்) | |
| 8 | Details of activity you wish to apply for<br>பணிகள் மேற்கொள்வதற்கான விவரங்கள் | Tick all or any |
| | (a) Installment of Diesel Pump set / electric motor<br>டீசல் பம்ப் செட்/மின்சார மோட்டார்களை நிறுவுதல் | |
| | (b) Laying of conveyance pipes<br>நீர்ப்பாசன குழாய்கள் அமைத்தல் | |
| 9 | Aadhaar Card Number of the farmer<br>விவசாயியின் ஆதார் அட்டை எண் | |
| | Bank Account details to which subsidy to be credited<br>மானிய தொகை செலுத்த உள்ளவங்கி கணக்கு விவரங்கள் | |
| | Account Number<br>கணக்கு எண் | |
| | Account Type<br>கணக்கு வகை | |
| | Name of the bank<br>வங்கியின் பெயர் | |
| | Name of the branch<br>கிளையின் பெயர் | |
| 10 | Copy of the Chitta/Adangal attached<br>இணைக்கப்பட்ட சிட்டா / அடங்கல் பிரதி | Yes/No<br>ஆம்/இல்லை |
| 11 | Any other details<br>வேறு ஏதேனும் விவரங்கள் | |

- Copy of Chitta/Adangal shall be mandatorily attached. Otherwise Application will be summarily rejected.
  சிட்டா/அடங்கல் நகல் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும். இல்லையெனில் விண்ணப்பம் ஒட்டுமொத்தமாக நிராகரிக்கப்படும்.
- I am aware that the subsidy will be eligible only after installation of Micro-Irrigation System
  நுண்ணீர் பாசன அமைப்பு பொருத்தப்படாமல் இருந்தால் மானியம் பெற தகுதியற்றவர் ஆகிறேன் என்பதனை நான் அறிவேன்.

Signature of farmer
விவசாயியின் கையொப்பம்

Signature of Receiving Officer
With date seal
பெறும் அதிகாரியின் கையொப்பம்
(தேதி மற்றும் முத்திரையுடன்)

தென்காசி சு ஜவஹர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

//உண்மை நகல்//

18/8/2022
பிரிவு அலுவலர்.

18/8/22

**இணைப்பு -IV**

**அரசாணை (நிலை) எண். 67, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் (சிஉ_தி)துறை, நாள். 18 .08.2022.**

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கு நீர்பாசனத்திற்கான பிவிசி குழாய்கள் (PVC Pipes) வாங்கும் திட்டம் – தனித்த கள ஆய்வு குறிப்பு படிவம்.**

## Laying of Conveyance Pipes

| | | |
|---|---|---|
| i. | Details of source of water | |
| ii. | Total extent of land (ha) | |
| iii. | Total extent covered (ha) | |
| iv. | Actual quantity of pipes required to cover 1 ha | |
| v. | Name of the approved firm | |
| vi. | Date of supply of pipes | |
| vii. | Invoice number and the cost involved | |
| viii. | Total cost of pipes/ ha | |
| ix. | 50% cost of pipes/ha | |
| x. | Eligible subsidy | |
| xi. | Whether Joint Verification Report uploaded in MIMIS | |
| xii. | Name of the ADA/AD/AAO/ADH/HO/AHO certifying the invoices | |
| xiii. | Recommendation of ADA/AO/AAO/ADH/HO/AHO | |

**Signature of District Manager,**
**TAHDCO**

**Signature of Agriculturer/**
**Horticulture Officer**

தென்காசி சு ஜவஹர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர். 18/8/2022

18/8/22

**இணைப்பு-V**

**அரசாணை (நிலை) எண். 67, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் (சிஉதி)துறை, நாள்.18.08.2022.**

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகள் புதிய மின்மோட்டார் வாங்கும் திட்டம் – தனித்த கள ஆய்வு குறிப்பு படிவம்.**

**Inspection Report format for disbursement of subsidy for Installation of Diesel Pump sets/Electric motor**

| | | |
|---|---|---|
| i. | Depth of existing bore well / tube well(m) | |
| ii. | Ground water level (m) | |
| iii. | Discharge of water from bore well (Litres/hr) | |
| iv. | Number of Pumping hours in a day | |
| v | Depth of existing open well (m) | |
| vi | Ground water level (m) | |
| vii | Discharge of water from open well (Litres/hr) | |
| viii | Number of Pumping hours in a day | |
| ix | Name of the approved supplier of Diesel pump sets/Electric motors | |
| x | HP of Diesel pump sets/Electric Motors | |
| xi | Date of subsidy of Diesel pump sets/Electric motor | |
| xii | Invoice number and the cost involved | |
| xiii | 50% of the cost | |
| xiv | Eligible Subsidy | |
| xv | Whether Joint Verification Report uploaded in MIMIS | |
| xvi | Name of the ADA/AO/AAO/ADH/HO/AHO certifying the invoice | |
| xvii | Recommendation of ADA/AO/AAO/ADH/HO/AHO | |

Signature of District Manager,
TAHDCO

Signature of Agriculturer/
Horticulture Officer

தென்காசி சு ஜவஹர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

//உண்மை நகல்//

சி. [signature] 18/8/2022
பிரிவு அலுவலர்.

18/8/22